## சுதந்திரனுக்கு என்ன நடக்கிறது?

இந்தியா, இங்கிலாந்து. மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பும் சுதந்திரன் ஏடுகள் அங்குள்ளவர்களுக்கு கிடைப்பதில்லையென நமக்கு புகார்கள் வந்துள்ளன. அப்படியானல் வெளிநாடுகளுக்கு முகவரியிட்டு நாம் தபாலில் சேர்க்கும் சுதந்திரனுக்கு என்ன நடக்கிறது? தபாலமைச்சு திட்டமிட்டு அவற்றை தடுத்து வைக்கிறதா? அல்லது தபால் ஊழியர்கள் முத்திரைகளை உரித்து களவு எடுத்துக்கொண்டு பத்திரிகைகளை வீசிவிடுகிறார்களா?


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆனி 21 | றஜபு 5 | (4-7-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 21


### கூட்டுச் சேரா மாநாட்டு நேரத்தில்

# சிங்களச் சிறைகளில் தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம்?

ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் முன்னர், விடுதலை செய்யப்படாவிடின், அல்லது நீதி மன்ற விசாரணைக்குட்படுத்தப்படாவிடின் சிறைச்சாலைகளில் தற்போது அரசியல் காரணங்களுக்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளுக்குள்ளேயே சாகும்வரை உண்ணாவிரத இயக்கமொன்றை ஆரம்பிக்கக் கூடுமென்று தெரியவருகிறது. கூட்டுச்சேரா மாநாடு இலங்கையில் நடைபெறும் சமயம் இவர்கள் தமது உண்ணாவிரத நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்று சுதந்திரனுக்கு கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது!

1972ம் ஆண்டு மே 22ம் நாள் புதிய குடியரசு அரசியல் சட்டம் வந்தநாள்முதல் கடந்த 4ஆண்டு காலமாக தமிழின விடுதலை கோரிய தமிழ்இளைஞர்கள்தொடர்ச்சியாக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு இருப்பது தெரிந்ததே. இவர்கள் யாழ்ப்பாணம், கண்டி போகம்பரை, வெலிக்கடை ஆகிய இடங்களிலுள்ள பல்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகாலம் சிறையிலடைக்கப்பட்டு 1974ம் ஆண்டு இறுதியில் விடுதலை செய்யப்பட்ட 42 இளைஞர்கள்கூட, மறுபடியும் 1975 ஆகஸ்டில் கைது செய்யப்பட்டு, மீண்டும் கடந்த ஓராண்டாக விசாரணையின்றி சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். தற்போது சிறைச்சாலைகளில் சுமார் 75க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இவர்களில் ஒரு சிலரைத் தவிர மிகப்பலர் நீதிமன்றத்தில் இதுவரை ஆஜர் செய்யப்படவில்லை.

—5-ம் பக்கம் பார்க்க

### கூட்டணி நடவடிக்கைக்குழு கூட்டம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்றுவது நடவடிக்கைக் குழுக் கூட்டம் 3-7-76 சனிக்கிழமை காலை திருகோணமலையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் திருகோணமலையில் 9, 10ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் கூட்டணியின் சிறப்பு மாநாட்டுக்கான செயல் திட்டங்கள் யாவும் பூர்த்தி செய்யப்படும்:

### ● தமிழர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதை எதிர்த்து

# இலங்கை அரசாங்கத்தை கண்டித்து பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பிரேரணை!

## ஆறு பிரிட்டிஷ் பா. உ.க்கள் முன்னறிவிப்பு!

இலங்கைத் தமிழர்களையும் அவர்களது தலைவர்களையும் இலங்கை யரசு தடுப்புக் காவல் சிறையில் தள்ளுவதற்கு கண்டனம் தெரிவித்தும், இது சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசு உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கோரியும் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஆறு பிரிட்டிஷ் எம். பிக்கள் கூட்டாக கையெழுத்திட்டு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இந்த பிரேரணையை விவாதிப்பதற்கு விரைவில் நாளையொதுக்கித் தரும்படியும் அவர்கள் கோரியிருக்கிறார்கள்.

பிரட்டிஷ் காமன்ஸ் சபையில் மேற்படி பிரேரணையை கொண்டுவருவதற்கு முன்னறிவிப்புக்கொடுத்திருக்கும் எம். பீக்கள் வருமாறு:- திருவாளர்கள் ஜோன் வெல்ஸ், கென்னத் லூயிஸ், றெஞல்ட் பெல், ஸ்டீபன் ஹாஸ்டிங்ஸ், ஜோன் பேஜ், சேர்ஜோன் றெட்ஜேர்ஸ் ஆகியோராவர்.

மேற்படி பிரேரணையை தாம்கொண்டுவருவதாக இலண்டனிலுள்ள ஈழத்தமிழர் விடுதலை இயக்கமான ஈழத்தமிழர் கழகத்தினருக்கு குறித்த ஆறு எம். பீக்களும் அறிவித்திருப்பதுடன் தமது பிரேரணைக்கு மேலும் இவர்கள் ஆதரவு திரட்டி வருகின்றனர்,

காமன்ஸ்சபையின் ஒழுங்குப் புத்தகத்தில் மேற்கண்ட எம்; பிக்களின் பெயரில் 428வது பிரேரணையாக இது இடம் பெற்றிருக்கிறது; அப்பிரேரணையின் ஆங்கிலவடிவம் வருமாறு:-

"That this House deplores the detention by the Sri Lanka Government of Tamil members of Parliament, and other Tamils; urges Her Majesty's Government to make urgent representation."

ஈழத்தமிழர் விடுதலையில் வெளிநாடுகள் எடுத்துவரும் அக்கறைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

### ஐயோ பாவம்!

"நான் தமிழரசுக் கட்சியிலிருந்தபோது அடி உதைபட்டேன்; மூன்று மாத காலம் சிறையிலும் இருந்தேன். ஆனல் இப்போது என்னைத் தகுதியற்றவன் எனப்பேசுகின்றனர்."

—இராசன் செல்வநாயகம்
(வீரகேசரி 16-6-76)


ஆனி இதழ்

இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது!

ஈழத்தின் தலைசிறந்த கலை இலக்கிய ஏடான

சுடர்
CHUDAR

● குடமுழுக்குக் காணும் திருக்கேதீச்சரத்தின் எழிலார்ந்த தோற்றம் அட்டையை அழகு செய்கிறது.

● உள்ளே காசி ஆனந்தனின் 'சிறைச்சாலை இனிக்கும்', கோவை மகேசனின் தத்துவக்கட்டுரை, மூன்று சிறு கதைகள், முத்தான கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் பல அம்சங்களுடன் கிடைக்கிறது!

விலை ரூபா ஒன்று மட்டுமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “முறைப்பாட்டாளர் தமது சாட்சியத்தை திரித்துக் கூறியிருக்கிறார்!

“நாங்கள் இரு கட்சியினுடைய ஆவணச்சான்றுகளையும் வாய்மொழிச்சாட்சியங்களையும் பரிசிலனை செய்தோம் முறைப்பாட்டாளர் (தனபால சிங்கம்) தனது சாட்சியத்தில் அ. எ. வி. சங்கத்துக்கும் எந்த அரசியற்கட்சிக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லையென்று திரித்துச் சான்று பகர்ந்துள்ளார். இருந்தும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தொடக்கத்திலும் அமைப்பிலும் தமிழரசுக்கட்சியுடன் நெருங்கிய தொடர்புள்ளது என்பதை நாங்கள் ஒரு தடையுமின்றி நம்புகின்றோம்”

—இவ்வாறு சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராக தனபாலசிங்கம் என்பவர் பத்திரிகைப் பேரவையில் தொடர்ந்திருந்த வழக்கில் பத்திரிகைப்பேரவை அளித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

25-5-75 சுதந்திரன் இதழில் “உண்மை விளம்பி” என்பவர் எழுதியிருந்த கட்டுரையில் இடம்பெற்றிருந்த ‘ஆறு விடயங்கள் உண்மைக்கு மாறானது, திரிக்கப்பட்டது, அல்லது முறையற்ற கூற்று என்று குற்றம் சாட்டி பத்திரிகைப் பேரவையில் சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராக வழக்கு ஒன்றை திரு. தனபால சிங்கம் தொடர்ந்திருந்தார்;

இவ்வழக்கில் முறைப்பாட்டாளரின் சார்பில் முறைப்பாட்டாளர் மட்டுமே சாட்சியம் பகர்ந்தார். சுதந்திரன் ஆசிரியர் சார்பில் திருவாளர்கள் பி. சிவரஞ்சன், என். இராசகுலேந்திரன், நா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சாட்சியம் பகர்ந்தனர்.

இவ்வழக்குத் தீர்ப்பில், கட்டுரையிலிடம் பெற்றிருந்த காங்கேசன்துறை இடைத்தேர்தல் பற்றி குறிப்பு ஒன்று மட்டுமே உண்மைக்கு மாறானது என்று பத்திரிகைப் பேரவையினர் கருதியுள்ளனர். அடுத்து, மேற்படி கட்டுரையிலிடம் பெற்றிருந்த இரு சொற்கள் முறையற்றவையென்று பத்திரிகைப் பேரவையினர் கருதியதால், அதற்காக சுதந்திரன் ஆசிரியரை கண்டித்துள்ளனர். இவை தவிர தனபாலசிங்கத்திடமோ, அல்லது சங்கத்திடமோ சுதந்திரன் மன்னிப்பு கோர வேண்டுமென்று பேரவையினர் கட்டளை எதுவும் இடவில்லை.

### புகார்

(1) “சென்ற ஆண்டு மன்னாரில் நடந்தேறிய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தற்போது பதவியிலிருக்கும் தலைமைப்பீடம் மூதறிஞர் செல்வாவின் பெயரைக்கூறி படத்தைக்காட்டி பதவியைக் கைப்பற்றியது” என்ற கூற்று உண்மையல்ல என்று புகார் செய்தார் தனபாலசிங்கம்.

### தீர்ப்பு

ஆனால், பத்திரிகைப் பேரவையோ எதிராளி (சுதந்திரன் ஆசிரியர்) சமர்ப்பித்த ஆவணத்தைக்கொண்டும் வாய்மொழிச் சாட்சியத்தின் மூலமும் அ. எ. வி. சங்கத்தின் தலைமைப்பீடம் மன்னாரில் நடந்தேறிய பொதுக் கூட்டத்தில், திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் படத்தைக் காட்டிப்பதவிக்கு வந்தார்கள் என்பது எள்ளளவு சந்தேகத்துக்குமிடமின்றி நிருபிக்கப்பட்டதாக தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது.

### புகார்

(2) “இன்றுவரை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகள் எதிலும் பங்கு கொள்ளாது ஒதுங்கியிருந்து வரும் தலைமைப்பீடம், அவ்வப்பொழுது தமிழர் கூட்டணித் தலைவர்களுக்கும் எதிராக நச்சுக்கருத்துக்களை கொட்டி வரத்தவறுவதில்லை” என்ற கருத்து உண்மையற்றது என்பது தனபால சிங்கத்தின் புகார்.

### தீர்ப்பு

“அரசாங்க எழுதுவினைஞர் சங்க தலைமைப்பீடம் அவ்வப்பொழுது தமிழர் கூட்டணித்தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் எதிராக நச்சுக்கருத்துக்களை கொட்டி வரத்தவறுவதில்லையென்று பிரசுரிக்கப்பட்ட விடயத்தை உண்மைக்கு மாறானது என்று முறைப்பாட்டாளர் நிருபிக்கத் தவறிவிட்டார். பிரதானமாகக் குறிப்பிட்ட ஆவணத்தில், மார்கழி—தை 1974—1975 வெளியாகிய எழுச்சி பத்திரிகையில், பத்திராசிரியர் கருத்துரையில் ஒரு காலத்தில் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைமைப்பீடம் தோட்டத் தொழிலாளரை நம்பக்கூடாது என்று அன்று பேசியது; ஆனல் இன்று திருவாளர் தொண்டமானையும் தங்கள் முன்னணியில் இணைத்துள்ளது; இது தமிழர் ஐக்கிய ஒற்றுமைக்காகவா? அல்லது தன்இனத்தைசேர்ந்து கெடுப்பதற்காக தீட்டிய சதியா?” இது பத்திரிகைப்பேரவையின் தீர்ப்பு.

### புகார்

(3) “பொதுச் சபையால் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட நா. பாலசுப்பிரமணியத்தை தேர்தல் நடந்த நாள் தொடக்கம் கடமையாற்ற முடியாதவாறு நிமிடத்திற்கு நிமிடம் தொல்லைகள் கொடுத்து இறுதியில் அவரை இடைநிறுத்தம் செய்தனர்” — என்ற கூற்று உண்மைக்கு மாறானது என்பது முறைப்பாட்டாளரின் புகார்.

### தீர்ப்பு

“நா. பாலசுப்பிரமணியம் தமிழர் கூட்டணி ஆகியவற்றில் ஆரம்பகாலத் தொண்டர்; சங்கக் காரியதரிசியாக கடமையாற்ற முடியாதவாறு போகிய தொல்லைகள் கொடுத்து அவ்வரைப் பதவி [illegible] இவ் விடயம்பற்றி சாட்சியத்தில் குறிப்

விட்ட விடயம் உண்மையாக நடந்த சம்பவம் என்றே நாங்கள் கருதுகிறோம்” என்பது பத்திரிகைப் பேரவையின் தீர்ப்பு!

### புகார்

(4) “தம்மிச்சைப்படி ஏதேச்சாதிகாரமான முறையில் துரோகப்பரின் முன்னுள் கையாளும், தற்பொழுது பச்சையோ நீலமோ என்று அங்கலாய்க்கும் ஒருவரை திரு. பாலசுப்பிரமணியத்தின் இடத்துக்கு நியமித்துள்ளது” என்ற கட்டுரைக்கூற்று உண்மைக்கு மாறானதென்பது தனபால சிங்கத்தின் புகார்.

### தீர்ப்பு

“கட்டுரையில் முறைப்பாடு செய்த அடுத்தவிடயம் துரோகப்பரின் முன்னுள் கையாளும், தற்பொழுது பச்சையோ நீலமோ என்று இடந்தெரியாது அங்கலாய்க்கும் ஒருவரை திரு. பாலசுப்பிரமணியத்தின் இடத்துக்கு நியமித்துள்ளனர். மேற்குறிப்பிட்ட நபர் திரு. எஸ். பரராசசிங்கமே. இவ்விடயம்பற்றி சாட்சியமளிப்பதற்கு பரராசசிங்கம் சாட்சியம் கூற அழைக்கப்படவில்லை. ஆனல் முறைப்பாட்டாளர் எஸ். பரராசசிங்கத்தை துரையப்பாவின் ஆதரவாளரோ அல்லது பரராசசிங்கம் பச்சையோ நீலமோ என்று அங்கலாய்ப்பவரோ என்றும் எந்தச்சந்தர்ப்பத்திலாவதும் முறைப்பாட்டாளர் ஊர்ஜிதப் படுத்தவில்லை. எனவே சுதந்திரன் கட்டுரையில் குறிக்கப்பட்ட இந்த விடயம், உண்மைக்கு மாறானது என்று நிரூபிக்கப் படாதவிடயம், என்றே நாங்கள் கருதுகிறோம்” என்று கூறும் பத்திரிகைப் பேரவை “துரோகப்பர்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதை மட்டும் கண்டித்துள்ளது.

### புகார்

(5) சங்கத்தின் எழுச்சி ஏடான ‘எழுச்சியை’ சிறு நரியொன்று தன்னிச்சைப்படி தன்னலத்திற்காகக் கையாண்டு தமிழர் கூட்டணிப் பிரமுகர்களிடையே சிண்டு முடிந்து வருகின்றது. மாற்றார்களின் எச்சில் இலைகளை நக்கும் இச் சிறு நரி ஏற்கெனவே பல பொது ஸ்தாபனங்களிலும்கூட நாடகமாடி துரத்தியடிக்கப்பட்டதென்ற கூற்றுக்கு ஆதாரமில்லையென்பது முறையீட்டாளரின் புகார்;

### தீர்ப்பு

“சங்கத்தின் ஏடான எழுச்சி ஆசிரியரை, சிறு நரியொன்று தன்னிச்சைப்படி தன்னலத்திற்காக கையாண்டு தமிழர் கூட்டணிப் பிரமுகர்களிடையே சிண்டு முடிந்து வருகின்றது என்ற கட்டுரையில் இடம்பெற்ற விடயம் அடுத்த முறைப்பாட்டுக்குரிய விடயமாகும். இந்த விடயத்தை ருசுப்படுத்தும் ஆவணத்தை எதிராளி (சுதந்திரன் ஆசிரியர்) சமர்ப்பித்து தன் கூற்றின் உண்மையை நிருபித்துள்ளார். எனவே இதை உண்மையென்றே ஏற்றுக்கொள்ளுகிறோம். அடுத்த முறைப்பாட்டு விடயம், மாற்றார்களின் எச்சில் இலைகளை நக்கும் இச்சிறு நரி ஏற்கெனவே பல பொது ஸ்தாபனங்களில் கூட நாடகமாடி துரத்தியடிக்கப்பட்டது! இவ்விடயம் பற்றி சாட்சி பகரும் பொழுது எழுச்சிப்பத்திரிகாசிரியர் த. மனோகரன் நடத்தையைப்பற்றி சிறிது குறிப்பிட்டுள்ளார். ஆனல் இக்கூற்று உண்மைக்குமாறானது என்று நாங்கள் தீர்மானிக்கமுடியாத இக்கட்டான நிலையிலுள்ளோம் ஏனெனில் த. மனோகரன் பேரவையில் சாட்சியமளிக்காததனல்.” — இவ்வாறு தமது தீர்ப்பில் கூறும் பத்திரிகைப்பேரவை, கட்டுரையிலிடம் பெற்ற “மாற்றார்களின் எச்சில் இலை நக்கும் இச் சிறு நரி” யென்ற கூற்று மட்டும் முறையற்றதெனக் கண்டித்துள்ளது.

## தமிழரசுக்கும் அ. எ. வி. சங்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு!”

### சுதந்திரன் ஆசிரியருக்கு எதிரான விசாரணையில் பத்திரிகைப் பேரவை அளித்த தீர்ப்பு!

### பாலசுப்பிரமணியத்தை தொல்லைகொடுத்து வெளியேற்றியது உண்மை!

### புகார்

(6) என் காலத்தில் சங்கம் உடைந்தொழிந்தால் அதுவும் எனக்கோர் பெருமையே எனச் சங்கத் தலைமைப்பீடம் கூறிவருவதாக கட்டுரையில் குறிப்பிடப்பட்டது உண்மைக்குமாறானது என்பது முறையீட்டாளரின் புகார்.

### தீர்ப்பு!

“முறையீட்டாளர் தனது சாட்சியத்தில் மேற்படி கூற்றைத்தான் கூறவில்லையென்று மறுத்துள்ளார்; இருந்தபோதும் எதிராளியினர் சாட்சிகளாக அழைக்கப்பட்ட திரு. என். பாலசுப்பிரமணியமும் மற்றும் சாட்சிகளும் தலைவர் இப்படிக் கூறியுள்ளதாக வாய்மொழிச் சாட்சியாக பகர்ந்துள்ளார்கள். எனவே இவ்விடயம் உண்மைக்குமாறானது—திரிக்கப்பட்டது-அல்லது முறையற்ற கூற்று என்பதைத் தீர்மானிக்க முடியாத இக்கட்டான நிலையிலுள்ளோம்” என்பது பத்திரிகைப் பேரவையின் தீர்ப்பு.

(சாட்சியங்கள் பற்றிய விபரங்கள் பின்னர் வெளிவரும்.)

## கேட்டது கிடைக்கவில்லை! எதிர்பார்த்தது நடக்கவில்லை!

25 5 75 சுதந்திரனில் “துரோகப் பாதையில் செல்லும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஜனவேகக் கும்பலின் வலைக்குள் சிக்கித் தடுமாறுகிறதா?” என்ற தலைப்பில் ‘உண்மை விளம்பி’யென்பவர் எழுதியிருந்த கட்டுரையில் இடம் பெற்றிருந்த கருத்துக்களை ஆட்சேபித்துப் பத்திரிகைப் பேரவையில் திரு. சதா. தனபாலசிங்கம் என்பவர் சுதந்திரன் ஆசிரியருக்கு எதிராக தொடர்ந்திருந்த வழக்கில் சுதந்திரன் வெளியீட்டாளரும் சுதந்திரன் ஆசிரியரும் சங்கத்திடம் மன்னிப்பு கோரவேண்டும் என்று கேட்டிருந்தார்;

ஆனல் வழக்கு முடிவில், பத்திரிகைப் பேரவை அளித்த தீர்ப்பில் — தனபாலசிங்கத்தின் கோரிக்கைப்படி சுதந்திரன் ஆசிரியரோ, சுதந்திரன் வெளியீட்டாளரோ சங்கத்திடம் மன்னிப்பு கோரவேண்டுமென்று கட்டளையிடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் கேட்டது கிடைக்கவில்லை!

எதிர்பார்த்தது நடக்கவில்லை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயமே வா!

அன்பு நண்பா,

நீண்ட பல கிழமைகளாக உனக்கு மடல் தீட்டாமலிருந்து விட்டேன்; மடல் தீட்டிடாமல் அப்படி யென்னதான் செய்து கொண்டிருந்தாய் என்று நீ உரிமையுடன் கேட்டிடுவாய்! 'ஓய்வு' எடுத்துக்கொண்டிருந்தேன். ஓய்வு எடுத்தனேயோ? அதுவும் இந்த நேரத்திலா? விடுதலைக்காக உழைப்பவர்கள்—நாட்டுக்காக பாடுபடுபவர்கள் — இவ்வாறு ஓய்வு எடுத்துக்கொள்ளலாமா? என்றெல்லாம் கேள்விக்கணைகள் என்மீது பாய்ந்திடத்தயாராவதை நான் உணர்கிறேன்—ஆனால் நானாக 'ஓய்வு' எடுத்திடவில்லை — வேறு வழியின்றி ஓய்வு எடுத்திட, ஒதுங்கியிருந்திடவேண்டிய நிலைக்கு நான் உட்படுத்தப்பட்டேன்—இயற்கையால்! இறைவனால்!!

நண்பா, இரண்டு திங்களுக்கு முன்னர் என் உடலைப் பரிசோதித்த டாக்டர் ஒருவர், "'லோ-பிறெஷர்'' — சிலகாலம் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று என்னிடம் வற்புறுத்தினார்! தமிழ் ஈழத்தின் விடுதலையைத் தேடி, தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளிலும், மலைச்சரிவுகளிலும், காடுகளிலும், மேடுகளிலும், கடல்கடந்த நாடுகளிலும் உள்ளம் பொருமி, உயிரையும் அர்ப்பணித்திடச் சித்தமான நிலையில் போராடிக்கொண்டிருக்கும் போது நம்மில் எவரென்றாலும் ஓய்வு எடுப்பதுவோ, உல்லாசப் பொழுதுபோக்குவதோ நமது மனச்சாட்சியை வெட்டிப் புதைக்கும் செயலாகவன்றோ இருக்கும்? விடுதலைத்தேரை இழுத்து நடுவழியில் நிறுத்திவிட்டு எவராவது ஓய்வு எடுத்திட முடியுமா? எனவே ஓய்வு

னம்பலம், நாட்டு விடுதலைப் போரிலும் பூரணமாக ஈடுபடவேண்டும்; ஐ. நா. சபைக்கு சென்றுவந்த அவர் — வெளிநாடுகளுடன் தொடர்புள்ள அவர் — ஒத்துழைப்பு, சமரசம் போன்ற சிங்களவரின் தந்திரோபாயங்களுக்கு பலியாகிவிடாமல்—எதிர்காலத்தில் தன்னுடைய ஆற்றலையும் திறமையையும் தமிழ்ஈழ அரசை மீள்விக்கும் புனிதப் பணிக்கு அந்தரங்கசுத்தியுடன் ஒப்படைப்பாரானல் - ஈழத் தமிழினம் மேலும் மகிழ்ச்சியடையும்!

பொலிசாரின் குண்டாந்தடியடிக்கும், கோரத்தாக்குதலுக்கும் பலியாகி மண்டை பிளந்து எலும்பு முறிந்து செந்நீர் சிந்திய போதிலும்—கிஞ்சிற்றும் உறுதி தளராமல்—செந்தமிழ்த் திருமண்ணும் தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு எங்கள் செவ்விரத்தமும் பரிமாறித்தயார் என்பதை அறுதியிட்டுக் காட்டிய வீரத்தம்பியர் பதினெருவர் — வட்டுக்கோட்டை மாநாட்டின்போது கைது செய்யப்பட்ட காளையர்கள்—தமிழ் இளைஞர் பேரவையின் தங்கங்கள் — ஆ. ரகுபதிபாலகிறீதரன், க. உமாமகேஸ்வரன், ரி. சௌந்தரராசன், ச. செந்தூரன், யோகேஸ்வரன், அராலி ஆனந்தன், சாமி கனகலிங்கம், ரி. உதயகுமாரன், என். செல்வசிங்கம், எம். பத்மநாதன், கு. தங்கராஜா ஆகியோர்—நாற்பத்தைந்து நாட்கள் சிறைவாசத்தின்பின்னர் சொந்தப்பிணையில் விடுதலையாகி — வெளியே வந்த செய்தியையும் படுக்கையிலிருந்தவாறே அறிந்துமகிழ்ந்தேன்:

பிரதமர் நடவடிக்கையெடுத்துவருவதாக சூரியர் ஜமாய்த்திருந்தார் — அந்த அறிக்கையின்படி இதுவரை என்ன நடந்தது? எதுவுமே நடக்கவில்லையே!

ஐந்து அம்சத்தில் ஆரம்பித்த கம்யூனிஸ்டுகள்—பின்னர் அதைப் பன்னிரண்டு அம்சமாக்கி—இப்போது வேறு சில பந்தங்களையும் துணைக்கழைத்துக்கொண்டு இருபது அம்சம் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிருர்கள்! இந்த 20 அம்சம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை—அதன் வேகத்தைத் துவம்சம் செய்யும் சதி நோக்குடனேயே கொண்டுவரப்பட்டிருக்கிறதென்பதை சராசரி அரசியல் அறிவுள்ள எவராலும் புரிந்துகொள்ள முடியும்!

தமிழினம், தனது பிரதேசத்தில் தன்னைத் தானே ஆளும் உரிமையுள்ள ஒரு தனித் தேசிய இனம்; தனது தலைவிதியை தானே நிர்ணயிக்க பூரண சுதந்திரம் கொண்ட இனம்; என்கிற ஒரேயொரு அடிப்படையில் தான் தமிழினத்தின் பிரச்சினைகள் இனி அணுகப்படவேண்டுமே தவிர—தமிழர் பிரச்சினைகளை வெறும் சாதாரண சிறுபான்மையினப்பிரச்சினையாகக் கருதினல் தீர்வுகாணவே முடியாது!

தமிழ்த்தேசிய இனம் இந்நாட்டில் ஒரு சாதாரண சிறுபான்மை இனமல்ல — தனக்கென ஒரு பொது மொழியும், நாடும், கலை கலாசாரமும் பொதுவான பொருளாதாரமும், நீண்ட வரலாறும்கொண்ட ஒரு தனித் தேசிய இனம் என்கிற அடிப்படை உண்

# திருமலைக்கு வா!

எடுக்கும்படி டாக்டர் சொன்னபோது சிரிப்புத்தான் எனக்கு ஏற்பட்டது.

நண்பா, டாக்டர் சொல்லியும் ஓய்வு எடுக்காமல் ஏட்டுவேலைகளையும் இயக்கவேலைகளையும் கவனித்து வந்த என்னை கடந்த இருபது நாட்களாக இறைவன் கட்டாய ஓய்வு எடுக்கும்படி வைத்துவிட்டான்! ஆம், ஓய்வு எடுத்தே தீரவேண்டிய அளவுக்கு நோயொன்று திடீரெனவந்து என்னைப் படுக்கையில் வீழ்த்திவிட்டது! இதுதான் நான் உனக்கு மடல் தீட்டிடாத காரணம்! புரிந்ததா இப்போது?

நோய்ப்படுக்கையிலிருந்தபோதிலும், தமிழீழத்தாயகத்தின் அடிமை நிலையையும் நாட்டு நடப்புக்களையும் எண்ணி எண்ணியே என் உள்ளம் பொருமிக் கிடந்தது; தூக்கம் கண்களை தழுவ மறுத்தது; தொலைபேசி வழியாக இயக்கச்செய்திகளை நண்பர்கள் மூலம் அறிந்துகொண்டே துடித்தபடி இருந்தேன்!

யூன் திங்கள் 18ம் நாள் நம் தமிழீழத் தலைவர்களை — அண்ணன் அமிர்தலிங்கமும் ஏனையோரும் நீதிமன்றம் வந்த அந்த நிகழ்ச்சியை நேரடியாக காணமுடியாவிடினும், கற்பனையில் எண்ணிப்பார்த்து எழுச்சியும் பூரிப்பும் பெற்றேன். ஆம், அந்நாள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் பொன்னுள்! வட்டுக்கோட்டையில் நடைபெற்ற நமது தேசிய மாநாட்டில் நமது இயக்கத்தின் பெயர் தமிழர் விடுதலைக்கூட்டணியென மாற்றப்பட்டு—நமது விடுதலை இலட்சியத்தைப் பிரகடனம் செய்த பின்னர், அந்த இலட்சியத்தை எடுத்துரைப்பதும் எழுத்தில் வடிப்பதும் இந்த ஆட்சியினுல் குற்றமெனப் பிரகடனப்படுத்தப்பட்டு, பிரச்சினை இன்றைக்கு கோடேறியிருக்கிறது.

தேசிய அரசுப்பேரவையை நமது இலட்சியத்தை எடுத்துச்சொல்லும் ஒரு பிரசார மேடையாக எப்படிப் பயன்படுத்துகிறோமோ — அதே போல நீதிமன்றத்தையும் நமது இலட்சியத்தையும் கொள்கையையும் வாதத்திறமையுடன் எடுத்துக்கூறுகின்ற ஒரு பிரசாரமேடையாக மாற்றும் அருமையான வாய்ப்பை ஆட்சியாளர்கள் அளித்திருக்கிருர்கள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தானைத் தலைவர்களுக்காக வாதாட, மூதறிஞர் செல்வாவின் தலைமையில் சட்டமேதை ஜீ. ஜீ. பொன்னம்பலமும் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தது நோய்ப்படுக்கையிலிருந்தபடியே நான் கேட்ட மகிழ்ச்சிக்கும் பெருமைக்குமுரிய மற்ருேர் செய்தியாகும். கோர்ட்டுக்கு வந்த ஜீ. ஜீ. பொன்

நண்பா, நோய்ப்படுக்கையிலிருந்தபோது —என் நெஞ்சத்தை துடிக்க வைத்த செய்தி— கண்ணீர் வடிக்க வைத்த செய்தி — புஷ்பராணி யென்னும் தமிழ்ச் சகோதரியின் மானத்தோடு வெறிபிடித்த பொலீஸ் நாய்கள் விளையாடியதாகக் கூறப்பட்ட செய்தியாகும்! 'மறவர்படைதான் தமிழ்ப்படை— குலமானம் ஒன்றே அடிப்படை' என்று நமது தேசியக் கவிஞன் காசி ஆனந்தன் கூறியது போன்று குலமானம் காக்கும் தமிழ் பெண்களை இவ்வாறு மிருகத்தனமாக நடத்திய பொலிசாரின் வெறிச்செயலுக்கு எதிராக ஒவ்வொரு தமிழ் இதயமும் குமுறிக்கொண்டிருக்கும் என்பதை நான் அறிவேன்! யாராவது தவறு, குற்றம் புரிந்தால — அதற்கு சாட்சியமிருந்தால் — நீதிமன்றத்தில் நிறுத்தட்டும் — தண்டிக்கட்டும் — யாரும் அதை ஆட்சேபிக்கவில்லை! ஆனல் தமிழ் இளைஞர்களையும் தமிழ்க் கன்னியரையும் 'சந்தேகம்' என்ற போர்வையின்கீழ் கைதுசெய்து, அவர்களது மானத்தைக்கெடுத்துச் சித்திரவதை செய்யும் பொலிசாரின் வெறிச் செயலுக்கு ஒன்றில் அரசு முற்றுப்புள்ளிவைக்கவேண்டும்; அன்றேல் தமிழ் மக்களே தங்கள் பாதுகாப்புக்கு வேண்டிய வழிவகைகளை தேடிக் கொள்ள நேரிடும்!

நண்பா, இன்றைய தினம் தமிழ்ச் சமுதாயம், சுதந்திரம், விடுதலையென்ற ஒரேயொரு புனித நோக்குடனே தனது இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறது! மொழிச் சலுகைகளோ, வேலைவாய்ப்பு சலுகைகளோ, கல்விச் சலுகையோ கேட்டுக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது! இன்றைக்கு தமிழன், விடுதலைவிடுதலையென்றே முழங்குகிருன்! வேறு எந்தத் திசையிலும் அவன் திரும்பத் தயாராக இல்லை. இந்த முழக்கம் — இந்த இலட்சிய ஆவேசம்—ஆளுங்கட்சிகளின் அடிவருடிகள் சிலரின் அடிவயிறைக் கலக்குகிறது!

தமிழினம், உணர்ச்சிபொங்க உரிமை வேண்டிக் கிளர்ந்தெழும் சமயங்களில் எல்லாம்—பசியுடன் கதறியழும் குழந்தையின் வாயில் சூப்பியை திணிப்பது போல—அரசாங்கம் தமிழர் பிரச்சினையை தீர்க்கப்போகிறது; திட்டம் தயாராகிறது; சட்டம் இதோ வருகிறது; என்று எல்லாம் அரசு அடிவருடிகள் ஆலோலம் பாடிடத்தவறுவதில்லை! கடந்த நான்கு ஆண்டுகளாக நாளேடுகளில் நீலம், சிவப்பு 'மை' அடித்து அமைச்சர் குமாரசூரியர் உட்பட அரசாங்க எடுபிடிகளால் தமிழர் பிரச்சினையை தீர்க்கப்போவதாக வெளியிடப்பட்ட அறிக்கைகள்தாம் எத்தனை எத்தனை? தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நால்வர் அண்மையில் தடுப்புக்காவலில் இருந்தபோது வீரகேசரியின் முன்பக்கத்தில் (31-5-76) குமாரசூரியரின் அறிக்கையொன்று கொட்டையெழுத்துக்களில் வெளியிடப்பட்டிருந்தது—[illegible] பிரச்சினைகளைத் தீர்க்க

மையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நிலை தொடருமானல் — தமிழர் பிரச்சினைகளுக்கு யாராலும் ஒருபோதுமே சமாதானத் தீர்வு கண்டிட முடியாது!

புனித விடுதலைப்பாதையிலே — கையில் சத்தியம் என்ற விளக்கை ஏந்தி—கல்லும் முள்ளும் காணுறும், கடும்புலியும் எதிர்ப்பட்டாலும் — சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் தூக்குமேடையும், எதிரே வந்தாலும்—நெருப்பாறுகளை நீந்திக்கடக்க நேரிட்டாலும்—எதற்கும் தயார் என்ற நிலையில்—இனிய சுதந்திரத்தை நாடி முன்னேறிக்கொண்டிருக்கு தமிழனின் சித்தத்தை குலைத்திட — திசைதிருப்பி பாதையை மாற்றிட — இருபது அம்சம், அது இது என்று ''பூவிறிஸ்'' கொழுத்திக்காட்டுகிருர்கள் அரசு எடுபிடிகள்! சுதந்திரம் என்கிற புனித இலட்சியத்தின் முன்னே இவைகள் யாவும் வெறும் கால் தூசிகள்! தமிழினம் இதையுணர்ந்து எச்சரிக்கையுடனிருந்திட வேண்டும்!

நாங்கள் சலுகைகள் கோரவில்லை— ஏனெனில் சலுகைகள் அடிமைகளுக்கே உரியவை; நாங்கள் அடிமைகளாக இருப்பதற்கு மறுக்கிறோம்; எங்கள் நாட்டுக்கு

## அரசியல் மேடை

நாமே எஜமானர்கள் — எங்கள் நாட்டை நாமே ஆளவேண்டும் என்கிறோம்! சலுகைகளை ஏற்போமானல் — சலுகைகளை யாசிப்போமானல்,—சலுகைகளுடன் திருப்தியடைவோமானல் — நாம் அடிமைத் தனத்தை ஏற்றுக்கொள்ளுகிறோம் என்பதே அர்த்தம். இருபது அம்சக் கோரிக்கையென்பது வெறும் சலுகைக்கோரிக்கையே! இதை எந்தத் தமிழன் ஏற்றிடுவான்?

சலுகைகள் வேண்டாம் — பிச்சைகள் வேண்டாம்—எமக்கு எம் தாயகம் வேண்டும் —அங்கு நம்மை நாம் ஆளவேண்டும்—என்கிற இலட்சிய முழக்கம் இன்று ஒவ்வொருமானமுள்ள தமிழனின் உள்ளத்திலும் படிந்துவிட்டது! இந்த இலட்சிய முழக்கத்துக்கு, வலிவும் பொலிவும் சேர்க்கும் மாநாடாக அடுத்த கிழமை திருகோணமலையிலே நடைபெறவிருக்

— 6-ம் பக்கப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ஐ. நா. சபைக்கு துணிவு பிறக்குமா?

இனவெறி, நிறவெறி, இன ஆதிக்கம்போன்ற மனித அடிப்படை உரிமை மீதான அத்து மீறல் நடவடிக்கைகள் உலகின் பல நாடுகளில் தலைதூக்கி வளர்ந்து இன்று விசுவரூபமெடுத்திருக்கின்றன,

கறுப்பலரை வெள்ளையர் அடக்கியாள முயற்சித்தாலும்—பெரும்பான்மை மக்கள் மீது சிறுபான்மை மக்கள் ஆதிக்கம் செலுத்த முயன்றாலும்—அல்லது சிறுபான்மை இனத்தின் மீது பெரும்பான்மை இனம் ஆதிக்கம் செலுத்தி அடக்கியாள அல்லது அழித்தொழிக்க முற்பட்டாலும் இவையெல்லாம் மனித சமுதாயத்தால் கண்டிக்கப்படவேண்டிய — தடுத்து நிறுத்தப்படவேண்டிய தீமைகளே!

இனக்கொலையும், நிறத்துவேஷமும், இனவெறியும் எந்த நாட்டிலிருந்தாலும் — அவற்றை மூர்த்தண்யமாக எதிர்ப்பதும், நசுக்கப்படும் இனத்தை அல்லது மக்களை கைதூக்கி விடுவதும், நியாயத்தை விரும்புகிற உலக நாடுகளினதும், ஐ. நா. சபையினதும் நீங்காக் கடமையாகும்!

உலகநாடுகளில் நசுக்கப்படும் இனங்கள் ஐ. நா.சபையை ஆவலோடு நம்பி எதிர்பார்த்து ஏமாந்துகொண்டிருக்கின்றனவே தவிர—இதுவரை ஐ. நா. சபை இன ஆதிக்கம்,இனவெறி, இனக்கொலை போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திட — தட்டிக்கேட்டிட எதுவித நடவடிக்கையையும் எடுத்ததில்லை!

ஐ. நா. சபையின் அசமந்தப்போக்கினால் உலகில் பல்வேறு நாடுகளிலும் இனவெறியும், இனக்கொலையும், இன ஏகாதிபத்திய காலனித்துவமும் இன்றைக்கு வளர்ந்து உச்சக்கட்டத்தையடைந்துவிட்டது!

தென்னுபிரிக்காவிலும், ரொடீசியாவிலும் பெரும்பான்மைக் கறுப்பர்களுக்கு எதிராக சிறுபான்மை வெள்ளையர்கள் இனவெறி, நிறவெறிக் குற்றங்களைப் புரிந்து வருகிறார்கள். இனக்கொலை நடவடிக்கையிலீடுபட்டு வருகிறார்கள்!

இலங்கையிலோ சிறுபான்மை இனமான தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக பெரும்பான்மை பௌத்த சிங்கள வெறியர்கள் இனவெறியைக் கொட்டுகிறார்கள்; தமிழ் இனத்தின் மீது ஆதிக்கம் புரிய எத்தனிக்கிறார்கள்.

ஒரு நாட்டை இன்னொர் நாடு அடக்கியாள்வதும் ஆதிக்கம் புரிவதும் சர்வதேச நியதிப்படி குற்றமானுல்—அதே குற்றத்தைத்தான் ஈழத்திலும் சிங்கள ஏகாதிபத்தியம் இழைத்து வருகிறது.

தென்னுபிரிக்காவில் வாழும் கறுப்பர்கள் பொறுத்தது போதும் எனப்பொங்கியெழுந்து வெள்ளை நிறவெறிக்கும் இனவெறிக்கும் எதிராக போராடி வருகிறார்கள்; அதன் பயனுக பல நூற்றுக்கணக்கான கறுப்பர்கள் அந்த இனவெறி ஆட்சியின் ஏவல் படைகளான பொலிசாரினுல் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்; கறுப்பர்கள் படித்துவந்த பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன!

1958ம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரத்தில் பௌத்த சிங்கள இனவெறி எப்படி தமிழ்பேசும் மக்களைப் பதம் பார்த்ததோ—அதேபோல இன்று தென்னுபிரிக்காவில் வெள்ளை இனவெறி ஆதிக்கம் கறுப்பர்களை கொன்று குவித்துவருகிறது.

தென்னுபிரிக்க அடக்குமுறை காட்டுமிராண்டித்தனமானது என்று ஐ. நா. காலனித்துவ ஒழிப்புக் குழுவின் தலைவர் ஜனுப் சலீம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

இத்தகைய வாயளவிலான வெறும் கண்டனங்களும், எச்சரிக்கைகளும் இனவெறி பிடித்த கொடுங்கோலர்களை ஒருபோதும் கட்டுப்படுத்தப்போவதில்லை!


ஐ நா. சபை வாயளவுக்கண்டனங்களுடன் மட்டும் நிற்காது உலகில் பரவி வரும் இனவெறியையும் இன ஆதிக்கத்தையும் தடுத்து நிறுத்தவும், பலம் குறைந்த இனங்களுக்கு சுதந்திர வாழ்வுதேடிக் கொடுக்கவும் ஏதாவது உருப்படியான காத்திரமான நேரடி நடவடிக்கை யெடுத்தேயாகவேண்டும்!

இன்றைக்கு தென்னுபிரிக்காவிலும், தெற்கு ரொடீசியாவிலும் வெடித்துள்ளதுபோன்ற இனவெறியம் இனக்கொலையும் சிங்கள பௌத்த வடிவத்தில் நாளை மீண்டும் இலங்கையிலும் தலையெடுக்கலாம்!

# “20 அம்சக் கோரிக்கை தமிழ் சமுதாயத்தை அழிக்க வந்த பயங்கர நச்சுக் கிருமி!”

## நடந்தவற்றை கூறுகிறார் விக்னராசா!

கடந்த 26-6-76 சனிக்கிழமை கொழும்பு இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் 20அம்சம் என்று பம்மாத்துக் காட்டிக்கொண்டு தமக்குத் தாமே தமிழ்பேசும் மக்களின் உரிமை இயக்கமெனப் பெயர் சூட்டிக் கொண்டிருக்கும் தரகர்கள் கூட்டத்தில் நடந்ததென்னவென்பதை அக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒருவரான திரு. விக்னராசா தந்தை செல்வாவின் இல்லத்தில் 30-6-76 நடைபெற்ற கருத்தரங்கில் சாங்கோபாங்கமாக எடுத்து விளக்கினுர். திரு. விக்னராசா, மேக்கன் டைல் கிறெடிட்டில் முகாமைப் பணிப்பாளராக பணிபுரிபவர்




திரு. விக்னராசா அங்கு பேசியது வருமாறு:—

“20 அம்சத் திட்டத்தின் மீது கூடிய அக்கூட்டம் கிருமிக் கூட்டம். சமூகத்தை தொலைக்கவந்த காட்டிக் கொடுக்கும் கூட்டம், தமிழனுடைய, நன்மைக்கு எதிராக வரக்கூடியவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களை எதிர்க்கவேண்டியது தமிழனுய்ப் பிறந்தவனின் கடமை.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி எனக்கு விடப்பட்டிருந்த அழைப்பில் “தமிழ்ப்பேசும் வெவ்வேறு இன மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் இப்பிரேரணைகளைக் கொண்டு வருகின்றோம்” என்றும் இப்பிரேரணைகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே மாநாட்டில் கலந்து கொள்ளவும் என்றும் எனக்கு அனுப்பப்பட்டிருந்தது — அந்த 40 பேர்களில் நானும் ஒருவராக இருந்தேன். தமிழ் மக்களின் பிரதிநிதி நான் என்பதையோ, அந்தப் பிரேரணைகளையோ நான் ஏற்றுக்கொள்ளாவிடினும் நான் அங்கு சென்றேன்.

ஏனெனில் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு தலைவர்கள் இன்று நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்நிலையில் — வேறுபட்டிருந்த தமிழ்க்கட்சிகளும், தமிழ்ச் சமுதாயமும் இணைந்து நிற்கின்ற இந்நிலையில்—இளைஞர்கள் தங்கள் எதிர்காலம் என்ன என்று குமுறிக் கொண்டிருக்கும் இந்நிலையில், பிரிவினையைத் தவிர வேறுவழியில்லையெனத் தீர்மானமெடுத்து நிற்கும் இந்நிலையில் இவர்களையும் இவர்கள் கொள்கையையும்பற்றி அறிவதற்காக நான் சென்றேன்.

இஸ்லாமிய கலாச்சார மண்டபத்தின் வாயிலை நான் அடைந்தபோது மசூர் மௌலானு அவர்கள் உள்ளே நுழைவதற்காக வாதாடிக் கொண்டிருந்தார் — நான் உள்ளே சென்ற போது புலவர் மணி திரு. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தார்— நல்ல அழகான தமிழிலே பேசிக்கொண்டிருந்தார் கேட்க நன்ருக இருந்தது. ஆனுல் அவர் என்ன பேசுகின்றேம் என்று அவருக்கே தெரியாமல் பேசி தனக்குதானே மகிழ்வடைந்ததை பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அவரைத் தொடர்ந்து ரசீத் அவர்கள் பேசினுர்கள் அவர் தன் உரையில் உரிமைப் போராட்டத்துக்கு இதுகாலமல்ல; சலுகைகளே வழி; நான் 1956ம் ஆண்டே சிங்களத்தை என் வீட்டு மொழியாக்கிவிட்டேன். நான் செய்வது போல் செய்வதுதான் வழி என்றுர்.

இதைத்தொடர்ந்து தலைவர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் அனுப்பப்பட்டிருந்த திருத்தங்களைப்பற்றிக் கூறினுர். ஒவ்வொரு திருத்தங்களாகப் புரட்டிய அவர் இப்போது போதிய அவகாசமில்லையென்று கூறிவிட்டு ஆக ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் அதாவது “பின்தங்கிய பகுதிகள் என்ற சொல்லை பின்தங்கிய பள்ளிக்கூடங்கள்” என்று செய்யப்பட்டிருந்த திருத்தத்தை மட்டும் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து பேசிய அவர் பலபேர் இதிற் பங்குபற்றுதற்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும் எல்லோர்க்குஞ் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லையென்றும் கூறினுர்.

அப்படி வந்திருந்தவர்களில் பலபேர் தமிழர்களுக்கு விமோசனம் தரக்கூடிய திட்டங்கள் இது போன்று வேறு எதுவுமில்லையென்று ஒரேமுகமாகக் கூறினர். ஆனுல் இது பற்றி பேச விரும்பியவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை.

பின்னர் இடைவேளையின் போதே தலைவரிடம் அனுமதி கேட்டு மூன்று நிமிடம் பேசுவதற்கு என்னை அனுமதித்தனர். நானும் அவர்களுக்குச் சார்பானவன் என

—5ம் பக்கம் பார்க்க

ஏனெனில் எண்ணிக்கையில் குறைந்த ஈழத் தமிழ்தேசிய இனம் ஐ. நா. சபை ஏற்றுக் கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது சுதந்திரத்துக்காக எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களத் தேசிய இனத்தின் ஆட்சியுடன் இன்று போராடி வருகிறது!

எனவே—தென்னுபிரிக்க இனவெறிக்கு எதிராக ஐ. நா. சபை காத்திரமான நடவடிக்கைகளை தாமதமின்றி உடனடியாக எடுக்குமானுல்—அது இலங்கைக்கும் இனவெறி கொண்ட ஏனைய நாடுகளுக்கும் ஒரு எச்சரிக்கையாக அமையும்!

ஐ. நா. சபை துணிவுடன் செயற்படுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இலங்கையில் நடைபெறும் இன ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்’

— மைக்கல் ஸ்கொட்

## ‘ஈழத் தமிழினத்தின் போராட்டத்துக்கு என்றும் எமது ஆதரவு உண்டு!

—றிச்சார்ட் ஹேரன்

### இலண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் பிரிட்டிஷ் தலைவர்கள் முழக்கம்!

இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டுமுகமாக இலண்டனில் இயங்கிவரும் ஈழத்தமிழர் கழகத்தின் (E. T. A.) ஆதாவில் இலண்டனிலுள்ள விம்பிள்டன் பார்க்கில் 19-6-76ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு டாக்டர் ஆர். சுந்தரலிங்கம் தலைமை தாங்கினர். இலண்டனிலுள்ள ஈழத் தமிழர்களுடன், ஆங்கிலேயர்களும் ஏராளமாக கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்கள் பலர் கலந்துகொண்டு ஈழத் தமிழர் போராட்டத்துக்கு தங்கள் பூரண ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர்.

சிறுபான்மை உரிமைக் குழுவைச் சேர்ந்த வண; மைக்கல் ஸ்கொட் (Rev. Michal Scott) அங்கு நீண்டதோர் உரையொன்றை நிகழ்த்தினர். அவர் தமது உரையில, இன ஆதிக்கம் என்பது வெள்ளைத்தோல் கறுப்புத்தோலை சுரண்டுவதுமட்டுமல்ல—அது இலங்கையில் நடப்பதுபோன்று மண்நிறத் தோல், அதே நிறத்தோலினை அடக்குவதும் இன ஆதிக்கமே யாகும் என்று குறிப்பிட்டு, இத்தகைய இன ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று முழக்கமிட்டார்.

லிபரல் கட்சியின் சார்பில் றிச்சாட் ஹேரன் (Kichard Heron) என்பார் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் — ஈழம்வாழ் தேசிய இனம் நடத்துகின்ற போராட்டங்களுக்கு தங்கள் ஆதரவு என்றும் உண்டு என ஆணித்தரமாக எடுத்துரைத்ததுடன், தனது கட்சியின் கூட்டத்திலும், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிக் கிளப்பவிருப்பதாகத் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் கழகத்தின் சார்பில் நடந்த இக் கூட்டம், ஈழத்தமிழர் விடுதலைக் கோரிக்கைக்கு இலண்டனில் மேலும் ஆதரவையும் அனுதாபத்தையும் திரட்டுவதில் வெற்றிபெற்றது.

---

### உடையார்கட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளை தொடக்கம்!

உடையார் கட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளையொன்றை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்புச் செயலாளரும் வவுனியா பா உ. மான திரு. சே. மா. செல்லத்தம்பு 24-6-76ல் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இதற்கு முன் படிப்பகம் ஒன்றையும் அவர் திறந்துவைத்தார். பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பே. பரமசிவம், உபதலைவர்: க குமாரசாமி, செயலாளர்! செ. இரத்தினலிங்கம், உதவிச் செயலாளர்! முத்து சுப்பிரமணியம், தனாதிகாரி: க. கதிரேசு செயற்குழு உறுப்பினர்கள்: ச. சேவியர், இ. சரவணபவன், வ. சின்னத்தம்பி, ச. மகாலிங்கம், வ. நாகரத்தினம், மு. தம்பிமுத்து.

---

### கூட்டுச்சேரா...

—1-ம் பக்கத் தொடர்

இந்த இளைஞர்களை நீதி விசாரணைக்குட்படுத்தும்படி அல்லது விடுதலை செய்யும்படி கோரி சர்வதேச இயக்கமான “அம்னெஸ்டி இன்டர்நேஷனல்” இலங்கை அரசை வற்புறுத்தி வருகிறது. எனினும் இதுவரை அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

இந்நிலையில் தங்கள் பிரச்சினைக்கு தாங்களே தீர்வு காண்பதற்கு சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் முடிவு செய்திருப்பதாகவும், தங்களுக்கு அரசு இழைக்கும் அநீதியையும், அவல நிலையையும் எடுத்துக்காட்டுவதற்காக, கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டின் போது உண்ணாவிரதம் இருப்பதற்கு அவர்கள் ஆலோசித்து வருவதாகவும் சுதந்திரனுக்கு கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

இப்படியொரு சூழ்நிலை தோன்றுவதற்கு இடங்கொடாது கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டுக்கு முன்னரேயே தமிழ் இளைஞர்களை அரசு விடுதலை செய்யக்கூடும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

---

### பெயர்பலகையில் சிங்களம்!

இதுவரை காலமும் மட்டக்களப்பு மாநகரசபை வீதிகளின் பெயர் பலகைகளில் சிங்களம் சிறிதேனும் இருக்கவில்லை. முன்பு இருந்த வீதிப்பலகையில் தமிழும், ஆங்கிலமும் மட்டுமே இருந்தது. தற்போது நகரின் முக்கிய வீதி எங்கும் உள்ள பெயர்பலகைகளில் தமிழ், ஆங்கிலத்துடன் சிங்களமும் புகுந்து முதலிடத்தை பெற்றுள்ளது. இதனால் மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் வசிக்கும் வரியிறுப்பாளர்கள் கொதிப்படைந்துள்ளார்கள். மட்டக்களப்பு மாநகரசபை வாயிலில் நீலக்கொடி ஏற்றியமை மட்டுமல்லாமல் வீதிகளின் பெயர் பலகையில் சிங்களத்துக்கு முதலிடம் கொடுத்துள்ளது தற்போதைய மா. ந. ச. ஆணையாளர் ஆட்சி. சில இடங்களில் சிங்கள எழுத்துக்கள் அழித்தும் காணப்படுகின்றன.

---

### கலைவிழாவில் பங்குபற்றுவோருக்கு...!

திருகோணமலை மாநாட்டையொட்டி 9-7-76 இரவு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விரும்பும் கலைஞர்கள் திருகோணமலை பா. உ, அல்லது மூதூர் பா. உ. வுடன் அல்லது மாநாட்டு செயலாளர் திரு. வீரசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

---

## “20 அம்சக்கோரிக்கை தமிழ்..

—4-ம் பக்கத்தொடர்

நினைத்தனர் போலும்! நானும்பேசினேன் — அந்த வேளையில் தான் மசூர் மௌலானா அவர்களின் குரல் எனக்குக் கேட்டது அப்பொழுதுதான் அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டிருந்தார் என நினைக்கின்றேன். அவரும் என்னை ஆதரித்தார். நான் பேசியதும் 20 அம்சத்திட்டக்காரர்கள் அதிர்ச்சியடைந்தனர். என்னைத்தொடர்ந்து எதிர்த்துப் பேசுபவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்காத நிலை தவிர்க்கப்பட்டுவிட்டது. மசூர் மௌலானாவும் பேசினர்.

இவர்களையும், இவர்கள் நிலையையும், கொள்கைகளையும் பார்த்தபோது ‘உருட்டின பம்பரங்கள் இங்கே; உருட்டின கை எங்கே’என்ற வாசகம்தான் எனக்கு நினைவிற்கு வந்தது. எனவே இத்திட்டத்தை தயாரித்தவர்கள் வேறு யாரோ என்பதை என்னால் தீர்மானிக்க முடிந்தது.

இந்நிலையில் தமிழர் சமுதாயம் செய்யக்கூடியது என்ன?

நெருக்கடியான காலங்களில் சமுதாயங்களிடையே கட்டுப்பாடு வேண்டும். அவர்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள்தான் அவர்களின் பிரதிநிதிகளாய்ப்பேசமுன்வரலாம். 20 அம்சம் பேசும் இவர்கள் யார்? இவர்களுக்கு தமிழ் மக்கள் புகட்டும் பாடத்தால் இன்னுமொரு நாற்பதுபேர் இனிமேல் புறப்படாத நிலைமை ஏற்படவேண்டும். இவர்கள் போன்றோரை தார்பூசி நடுச்சந்தியில் வைக்கவேண்டும். சுயநலத்தின்பொருட்டு பொது நலத்தை நடுச்சந்திக்கு வரவிடக்கூடாது.

சமுதாயம் நொந்தளித்துக்கொண்டிருக்கும் வேளையில்—தலைமைப் பீடம் சமுதாயத்துக்காக பாடுபடும் வேளையில் — அத்தலைமைப் பீடத்திற்கு எதிராக எழும் இவர்களது நடவடிக்கைகளை அனுமதிக்கக்கூடாது.

இன்று உள்ள பிரச்சினைகள் எமக்கல்ல எதிர்காலச் சமுதாயத்திற்கே. ஒருஇனத்துக்கு என்று நிலம் இருக்குமானல் அந்தமொழியைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. நிலம் உள்ள எந்த இனத்தினதும் மொழி அழிந்ததாக வரலாறே கிடையாது:

ஒவ்வொரு இனத்தினதும் நாடு முதலில் பாதுகாக்கப்படவேண்டும். அடுத்து அந்த இனம் தான் விரும்பியபடி அவர்கள் முயற்சியில் அந்நாட்டைக் கட்டியெழுப்பும் உரிமை வழங்கப்படவேண்டும்!

இவ்வாறு திரு. விக்னராசா பேசினர்: கருத்தரங்குக்கு திரு. ஈழவேந்தன் தலைமை வகித்தார்-

---

### மாநாட்டுக்கு நிதி அனுப்பும்படி வேண்டுகோள்!

திருகோணமலை மாநாட்டுக்கு நிதி வழங்க ஒப்புக்கொண்டவர்களும், நிதிப்படிவம் பெற்றவர்களும், 5-7-76க்கு முன்னதாக வே. தியாகராசா, பொருளாளர் தமிழர் விடுதலைக் கூட்டணி (திருமலைக் கிளை) 38, இராசவரோதயம் வீதி, திருகோணமலையெனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

---

### மாநாட்டுக்கு பிரதிநிதிகளாக வருவோர்க்கு...!

திருகோணமலை மாநாட்டுக்கு நாடெங்கிலுமிருந்து பிரதிநிதிகளாக வரவிருப்பவர்கள் தங்கள் பெயர் விபரங்களை உடனடியாக திருகோணமலை பா. உ. திரு. நேமிநாதனுக்கோ அல்லது மூதூர் பா. உ. திரு ஆ. தங்[illegible] வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்?

இன்று

குதுகல ஆரம்பம். மில்க்வைற்சோப் தயாரிப்பாளர்களின் ஆதரவில் கமலாலயம் அளிக்கும்

தாடிச் சாமியார்

வரணியூரான் எழுதும் தொடர் நாடக நிகழ்ச்சியை இன்று மாலை 3-30 மணிக்கு வானெலியில் கேட்டு மகிழுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விடுதலையே வேண்டும் என்றார் மாசேதுங்!

# தேசிய விடுதலைக்குப் போராடுவோரை கேலி செய்கிறார்கள் மாவோ தாசர்கள்!

# கம்யூனிஸ்ட் தோழர்களின் அரசியல் விபச்சாரம்!

''ஒரு நேர்மையான அரசியல் வாதிக்கு அரசியல் என்பது வாள் முனையில் நடப்பதைப் போன்றது''. என்கிறார் ஒரு மேல்நாட்டு அரசியல் அறிஞர்! நேர்மையான அரசியலையும் கலப்படமற்ற வியாபாரத்தையும் காண்பது அரிதாகிவிட்ட இந்நாளில் நேர்மையற்ற அரசியலுக்குச் சிகரம் வைத்தாற்போல் விளங்குபவர்களே இலங்கைக் கம்யூனிஸ்ட் (பீக்கிங் சார்பு) கட்சியினர்! கொள்கையும் குறிக்கோளும் இல்லாத இக்கட்சியினர் தங்கள் கட்சிக்கு ஆள் சேர்க்கும்முறை வேடிக்கையானது மட்டுமல்ல இவர்களின் அரசியல் விபச்சாரத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

அரசியல் என்றாலே என்ன என்று அறியாத அப்பாவி இளைஞர்களைப் பிடித்து, கம்யூனிஸ்டுக் கட்சியின் சொற்படி நடந்தால் அவர்களை இலவசமாக விமானமூலம் சீனாவுக்கு அனுப்பி அந்த நாட்டைப் பார்த்து வருவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தருவதாக ஆசை காட்டி, அவர்களின் கைகளில் சுவரொட்டிகளையும், பெயின்டுகளையும் கொடுத்து, தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் தலைவர்களையும் தாக்கி எழுதுமாறு ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள் இந்த சீனத் தரகர்கள்! சீனாவுக்கும் சிமைக்கும் அழைத்துச் செல்வதாக ஆசைகாட்டி இவர்கள் சேர்த்துக்கொள்ளும் இளைஞர்களின் தொகையைவிட, சிறைச்சாலைகளையும் சித்திரவதைகளையும் எதிர்பார்த்து விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து உழைக்கும் இளைஞர்களின் தொகையே பல நூறு மடங்குகள் அதிகம் என்பதை இந்த அரசியல் விபச்சாரிகள் நேரில் கண்டிருந்தும் விடுதலைக் கூட்டணியினூடாகத் தமிழ் மக்கள் எழுப்பும் இனவிடுதலைக் குரல் ஒருசில தமிழ் முதலாளிகளின் கூக்குரலாகும் என்று, முழுப்பூசனிக்காயை வெறும் தட்டில் மறைக்க முயல்வதைப்போல், தயங்காமல் முழுப்பொய்யைக் கூறுவதால் அரசியல் விபச்சாரத்துக்குரிய சந்தர்ப்பவாதம், பொய்ப்பிரசாரம், ஏமாற்று ஆகிய அத்தனை இலக்கணங்களையும் தாங்கள் உடையவர்கள் என்பதைப் பகிரங்கமாகவே நிறுவி வருகிறார்கள்.

வெறும் பகட்டான சொற்பிரயோகங்களாலும், நடைமுறையில் என்றுமே அணுக முடியாத கனவியல் குறிக்கோள்களாலும் ஓர் இனத்தின் பிரச்சினையைத் தீர்த்து

**ஆ. சேயோன்**

பண்ணாகம்

விடலாம் என்று எண்ணுவது அறியாமை ஆகும்! தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று சீனச்சார்பு கம்யூனிஸ்டுக்கட்சித் தோழர்கள் உளமார விரும்புவார்களானால் முதலில் தங்கள் குதர்க்க வாதங்களைக் கைவிட்டு, நடைமுறைக்குச் சாத்தியமான வழிவகைகளைச் சிந்திக்க முன்வர வேண்டும். இப்படியில்லாமல், தமிழ் மக்களின் இனவிடுதலைக் கோரிக்கை ஒருசில முதலாளிகளின் கூக்குரல் என்று கூறுவது யாருக்கும் நன்மை தர மாட்டாது.

இனவிடுதலை கோருபவர்கள் முதலாளிகள் என்றால் இதற்காகப் போராடுகின்ற தமிழ் மக்கள் அத்தனை பேருமே முதலாளிகள் என்றுதான் பொருள்! அப்படியானால் தமிழ் மக்களிலிருந்து முதலாளிகள் என்று யாரைப் பிரிக்க தோழர்கள் ஆசைப்படுகிறார்கள்? தங்களையும் பிறரையும் ஏமாற்றும் இந்த ஏமாற்றுப் பிரசாரத்தால் யாருக்கு என்ன நன்மை வந்துவிடப் போகிறது? வேண்டுமானால் சீனா இவர்களின் முதுகில் தட்டிக்கொடுக்கலாம். அதனால் தமிழ் மக்களுக்குப் பலன் எதுவும் கிடைத்துவிடாது! வர்க்கப் பிரச்சினையை இனவிடுதலைப் போராட்டத்தை இளப்புவதால் அரசியல் ஆதாயம் பெற நினைக்கும் இந்தத் தோழர்கள் உண்மையில் பரிதாபத்துக்குரியவர்கள். தமிழ் மக்களை முதலாளிகள் என்று கூறி தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். தனது தலையை மட்டும் மணலுக்குள் புதைக்கும் தீக்கோழி தன் உடல் முழுவதையும்தான் மறைத்துக் கொண்டுவிட்டதாக எண்ணி தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதைப்போல் உள்ளது தோழர்களின் இந்த நடவடிக்கைகள்!

[illegible] குரல் 'இனத்தை இனம் ஆளுவதால் இனப்பிரச்சினை தீராது'' என்பது. வாசிக்கத் தெரிந்த குழந்தை கூட இதைக் கண்டு சிரித்துவிடும்! ஓர் இனத்தை இன்னோரினம் ஆளுமானால் இனப் பிரச்சினை தீராது என்பதை நடைமுறையிலேயே கண்டுகொண்டிருக்கும்போது, கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா? என்பதுபோல் இதனை உணர்த்துவதற்கு பணம் செலவுசெய்து சுவரொட்டிகளை அச்சிடவும் வேண்டுமா? தோழர்களின் மூளைகளுக்கு திடீரென்று என்ன நடந்து விட்டதோ தெரியவில்லை!! ஒருவேளை தோழர்களை இப்படிக் கருதியும் அச்சிட்டிருக்கலாம்: 'ஓர் இனத்தை அதே இனமே ஆளுபவனாலும் அப்போதும் இனப் பிரச்சினை தீராது!!'' இப்படி நினைத்து அச்சிட்டதை இப்படியே பொருள் கொள்ளாமல் மேற்கண்டவாறு அல்லவா தமிழ் மக்கள் பொருள்கொள்கிறார்கள்! — பிள்ளையார் பிடிக்க குரங்காக வந்த கதைபோல் தான் தோழர்களின் கதையும் உள்ளது.

இதே தோழர்கள்தான் சில காலத்துக்கு முன்னர் ''இனவிடுதலையால் பொருளாதாரப்பிரச்சினை தீருமா?' என்று கேட்டவர்கள். தமது இந்தக்கேள்வி எவ்வளவு மடைத்தனமானது என்பதை வெகு நாட்களுக்குப் பின்னர் எப்படியோ ஒருவாறு புரிந்துகொண்டதும் கேள்வியை மெதுவாகத் திசைமாற்றி ''இனத்தை இனம் ஆளுவதால் இனப் பிரச்சினை தீருமா?'' என்று புதுக்கேள்வி போட்டிருக்கிறார்கள்! முன்னையதைப் போலவே இக்கேள்வியும் மடைத்தனமானது மட்டுமல்லாமல் அர்த்தமற்றதுமாகும்.

ஒரு குடும்பத்தினுள் இருக்கும் பிரச்சினையை அதே குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்தான் உணரமுடியுமே தவிர இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்தவரால் உணர முடியாது;

ஒரு கிராமத்தில் இருக்கும் பிரச்சினையை அதே கிராமத்தைச் சேர்ந்த ஒருவர்தான் உணர்ந்துகொள்ளமுடியுமே தவிர அயல் கிராமத்தவரால் உணரமுடியாது;

ஒரு நாட்டிலுள்ள பிரச்சினையை அதே நாட்டில் வாழுகின்ற மக்களால்தான்

—8-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரன் வெளியீடுகள்

### விற்பனையாகின்றன

○ அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை ரூ 2·00
—தமிழர் கூட்டணி சமர்ப்பித்த அறிக்கை

(1) நெஞ்சம் நிறைந்த தம்பி ரூ 2·00
—சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன்

(2) தெருப் புலவர் சுவர்க்கவிகள். ரூ 1·00
—உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

(3) துரோகிகளே! தூரவிலகுங்கள் ரூ 2·00
—சுதந்திரன் ஆசிரியர் கோவைமகேசன்

(4) தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம் ரூ 1·00
—ஈழவேந்தன்

(5) இலங்கையில் தமிழர்உயர்கல்வி ரூ 2·00
—பேராசிரியர் ஹிறைி குறூஸ்

(6) இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா ரூ 1·00
—டாக்டர் இரா. சனார்த்தனம் எம். ஏ.
—ஆ. இராசரத்தினம் எல்லாளன்

தொடர்பு கொள்ளவேண்டிய இடம்
சுதந்திரன் வெளியீட்டகம்
194-ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு-12

## அரசியல் மடல்......

—3-ம் பக்கத்தொடர்

கும் நம்முடைய இயக்கத்தின் சிறப்புமாநாடு அமைகிறது!

எங்கள் அருந்தமிழ் மண்ணில்— இராவணனார் போன் மண்ணில்—குளக்கோட்டன் திருமண்ணில்—கோணேசர் வாழ் மண்ணில்— அறப்போர் முழக்கம் எழுகிறது அடுத்த கிழமை! வட்டுக்கோட்டை மாநாடு நமது இலட்சியத்தை வகுத்தது; திருகோணமலையில் நடைபெறவிருக்கும் மாநாடு, அதையடையும் வழியை வகுக்கவிருக்கிறது! திருகோணமலையில் எழும் போர்க்குரல்—இந்த நாட்டையும் நானிலத்தையும் கதிகலங்க அடிக்கவிருக்கிறது!

1956ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் திருகோணமலையில் நடைபெற்ற மாநாடு, இலங்கையரசைப் பணிய வைத்தது; தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் எழுத வைத்தது; இந்த மாநாடோ, நமக்கென ஓர் அரசை அமைத்திட வழிவகுக்கப் போகிறது!

எனவே நண்பா, திருமலை நோக்கி திரண்டிடு! அருமை உடன் பிறப்புக்களே! அணி அணியாக திருமலை நோக்கித் திரண்டிடுவீர்! உதயசூரியன் கொடிகளுடன் இதயத்தில் விடுதலை வேட்கை ஏந்தி திருமலை நோக்கி வருவீர்! திக்கெட்டும் கொட்டட்டும் நமது விடுதலை முழக்கம்! பொங்குமாங் கடலென—புயலெனக் கூடிடுவீர்! எங்கள் தங்கத் தாயகத்தை மீட்கும் உறுதியுடன் வந்திடுவீர்! என் இதயமே வருக! இனிய தமிழ் மகனே தமிழ் மகளே வருக!! நிலைகுலையாத் தோழனே வருக! ஆம் — திருமலையில் கூடிடுவோம்! திருவிடம்— தமிழ்ஈழம் மீட்போம்!!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக்காவலில் பத்து நாட்கள்

## (4) பொலிசார் எடுத்த வாக்குமூலம்

பண்டிதர்
கா. பொ. இரத்தினம்

எங்களை அடுத்தடுத்துள்ள கூடுகளில் அடைத்து வைக்காமல் ஒருவர் தமது கூட்டிலிருந்து மற்றையவருடன் பேசமுடியாத தூரத்திலுள்ள கூடுகளிலேயே அடைத்துவைத்தனர். எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சி. ஐ. டி. பொலிசார் காவலாக நிறுத்தப்பட்டனர். நாங்கள் ஒருவரோடொருவர் உரையாடக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டது. எங்கள் கூடுகளில் நாங்கள் இருந்த பொழுது எங்கள் சட்டைப்பைகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றிலிருந்த பொருள்களின் பட்டியல் எழுதப்பட்டது. பி. ப. 3-00 மணியளவில் எங்களுக்கு நண்பகல் உணவுகொடுக்கப்பட்டது.

தடுப்புமுகாமில் உள்ள கூடுகளுக்குக் கதவுகள் இல்லை. ஒரு கட்டிலும் ஒரு மேசையும் ஒரு கதிரையும் ஒவ்வொரு கூட்டிலும் திணிக்கப்பட்டிருந்தன. கட்டிலுக்குப்புதியவிரிப்பும் தலையணைக்குப் புதிய உறையும் இடப்பட்டிருந்தன. தடுப்புமுகாமுக்கு அன்று ஆறேழு பேர் கொண்டு வரப்படுவார்கள் என்றும் அவர்களை அங்கு வைத்திருப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறும் தடுப்பு முகாமுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டதாம்.

தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்படுபவர்கள் தற்கொலை செய்வதற்கு வாய்ப்பளிப்பான யாவும் அகற்றப்பட்டுள. மின்விளக்குகள் கம்பி வலைக் கூட்டுக்குள் இடப்பட்டுள. மின் விளக்கு ஆளிகள் (சுவிச்) எட்டித்தொடமுடியாத உயரத்தில் கூரையில் பொருத்தப்பட்டுள. ஆளிகளிலிருந்து மெல்லிய நூல்கள் கீழே தொங்குகின்றன. இவற்றைக் கொண்டே ஆளிகள் இயக்கப்படுகின்றன. கத்தி, கயிறு போன்றவை அங்கு நுழையவும் முடியாது. சவரஞ்செய்யும் அலகுகளையும் (பிளேட்) அங்குள்ள காவலர்கள் அவற்றைப் பயன்படுத்தும் பொழுது கொடுத்துவிட்டுப் பின்னர் பெற்றுக்கொள்வார்கள்.

திரு. அமிர்தலிங்கமும் நானும் இருந்த மேல்மாடிக் கூடுகளின் முன் நடைபாதை இருந்தமையால் எங்கள் கூடுகளில் வெளிச்சமும் காற்றோட்டமும் போதிய அளவு இருந்தன, நாங்கள் நடைபாதையிலும் நின்று முன்னுள்ள வீதியையும் மக்கள் நடமாட்டத்தையும் பார்க்கலாம்.

திரு: க. துரைரத்தினமும் திரு. வ. ந. நவரத்தினமும் அடைக்கப்பட்டிருந்த கூடுகள் நிலமாடியில் இருந்தன. இவற்றுக்கு முன்னிருந்த ஒடுங்கிய இரு பக்கமும் சுவரைக்கொண்ட நடைபாதை காற்றோட்டமுமின்றி இருட்டு நிறைந்திருந்தது. அன்றியும் காவலர்களும் பிற ஊழியரும் ஓயாமல் அந்நடை பாதையில் செல்வதால் அந்நடை பாதையினை அவர்கள் பயன்படுத்தமுடியாது.

திரு. நவரத்தினத்தின் கூடு இருட்டின் புகலிடமாகக் காணப்பட்டது. சாளரமும் இல்லாத அந்தக் கூட்டுக்குள் அவர் நான்கு நாள்களை எப்படிக் கழித்தாரோ? திரு. துரைரத்தினத்தின் கூட்டுக்கு ஒரு சிறு சாளரம் உண்டு, எனினும் அதனூடாகக் காற்றுப் புகுதற்குப் போதிய வாய்ப்பில்லை. அவர் தம்முடைய கூட்டின் நீள அகலத்தை அளந்து எங்களுக்குக்கூறினார். நீளம் பதினென்றரை அடி; அகலம் ஆறு அடி. இந்தக்கூட்டுக்குள் வெளியுலகுடனோ மக்களுடனோ எவ்விததொடர்புமின்றி இரவு பகலாக நான்கு நாள்கள் அவர் அடைக்கப்பட்டிருந்தார்;

இவர்களுடைய கூடுகளுடன் ஒப்பிடும்பொழுது திரு. அமிர்தலிங்கத்தின் கூடும் முதலாம் தரமானவை என்று கூறலாம். எங்கள் பெயர்களைக்கேட்டு எழுதிய பொலிசு உத்தியோகத்தர் முதலாவது பெயரையும் நான்காவது பெயரையுமுடைய எங்களிருவரையும் மேல் மாடிக்கும் இரண்டாம் மூன்றும் பெயர்களுக்குரியவர்களைக் கீழ் மாடிக்கும் அனுப்பினார். ஒரு நட்சத்திரராகிய எங்கள் இருவருக்கும் மேல்மாடி கிடைத்தமை—குறிப்பிடத் தக்கது.

நண்பகல் உணவை முடித்தபின் நாங்கள் களைப்பாறினோம். வாசிப்பதற்குச் சில ஆங்கில நூல்கள் கொடுக்கப்பட்டன. உடுத்த உடையுடன் கைது செய்யப்பட்ட எங்களுக்கு அன்றிரவு மாற்றுடை தேவைப்பட்டது. அடுத்தநாள் காலைக்கடனை முடித்தற்கும் பற்பசை முதலியன தேவைப்பட்டன. கொழும்பிலிருந்த நண்பர்கள் சிலருடைய தொலைபேசி எண்களைக் கொடுத்தோம். எங்களுக்காகப் பொலிசார் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். நாங்கள் பேசமுடியாது; எங்கள் எல்லோருக்கும் தேவையான பொருள்களை நண்பர்கள் அன்றிரவு கொண்டுவந்து கொடுத்தனர். எனினும் எங்களை அவர்கள் சந்திக்கவில்லை. இரவு உணவு பொலிசாரால் கொடுக்கப்பட்டது. உணவையருந்தி உடைகளை மாற்றிக்கொண்டு இரவை நுளம்புகளின் தொல்லையோடு ஒருவாறு கழித்தோம்.

நாங்களிருந்த தடுப்புக் காவல் முகாம் கடுங்காவலுக்குட்படுத்தப்பட்டிருந்தது. துவக்கு ஏந்திய பொலிசார் நால்வர் இருபத்துநான்குமணி நேரமும் வ[illegible] நான்கு [illegible] நின்று காவல் புரிந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் நான்குமணி நேரம் மட்டுமே கடமையாற்றினர். இரவு முழுவதும் வளவும் கட்டடமும் மின் வெளிச்சத்தில் மூழ்கியிருந்தது. எங்கள் ஒவ்வொருவரையும் காவல் செய்த சி. ஐ. டி. பொலிசார் ஒவ்வொருவரும் எட்டுமணி வேலை செய்தனர். இரவு நேரங்களில் வேலை செய்வோர் நித்திரை கொள்ளக் கூடாதாம், நாள்கள் செல்லச்செல்ல இவர்களுக்கு அலுப்பும் வெறுப்பும் உண்டாயின. இரண்டு மூன்று நாள்களுக்குத்தான் பணியாற்ற வேண்டும் என்று கூறி அழைக்கப்பட்டார்களாம். பல நாள்கள் தொடர்ந்து பணியாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை;

எங்களைக் காவல்புரிந்த பொலிசார் எல்லோரும் சிங்களவரே; எனினும் அவர்கள் அன்புடன் மரியாதையாக நடத்துகொண்டனர். எங்களுடைய தேவைகளையும் நன்கு நிறைவேற்றினர். வளவினைக் காவல்புரிந்த சீருடைப் பொலிசாரில் தமிழரும் சிலர் காணப்பட்டனர். இவர்கள் எங்களைக் கண்டால் முகமலர்ந்து சிறுமுறுவல் காட்டுவர் "உங்களை இந்நிலைமையில் நான் காண விதித்ததே'' என்று கூறி ஒருவர் பெருந்துன்புற்றார்.

இரண்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலையிலும் நண்பர்கள் சிலர் எங்களுக்குத்தேவையான பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தனர். அவர்களை நாங்கள் சந்திக்க முடியவில்லை. பத்திரிகைகளையும் நூல்களையும் படிப்பதிலேயே இந்த நாள் கழிந்தது.

மூன்றும் நாள் 24-5-76 திங்கள் கிழமை புலர்ந்தது. தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பணம்கொடுத்துப் பெற்றுப்படித்தோம். தம்புலை எனும் இடத்தில் பிரதம அமைச்சர் நிகழ்த்திய உரை "டெயிலி நியூஸ்" எனும் ஆங்கில ஏட்டில் வெளிவந்தது. எங்களைக் கைது செய்யுமாறு தாமே பொலிசாருக்குக் கட்டளையிட்டதாகவும் தமிழரசுக் கட்சியினரே நாட்டைப் பிரித்தற்கு முயல்கின்றனரெனவும் பிரதம அமைச்சர் பேசியிருந்தார், தமிழ் நாட்டரசியல் பற்றியும் குறிப்பிட்டுத் தமது ஆத்திரத்தையும் தமதுஅறியாமையையும் அவர் புலப்படுத்தியிருந்தார்;

நான் தடுப்புக் காவலில் இருந்தாலும் புங்குடுதீவு மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினை என் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது. புங்குடு தீவு மக்களுக்குக் குடி தண்ணீர் கொடுப்பதற் [illegible] எனக்கு எழுத்தில் அறிவித்திருந்தது. அன்றியும் இந்தப் பிரச்சினை புங்குடு தீவுக் கிராமச் சங்கத்துக்கும் உள்ளூர் ஆட்சிப் பகுதிக்கும் உரியது எனவும் அந்த அமைச்சு கூறித்தப்புதற்கு முயன்றது. எனவே குடிதண்ணீர் வழங்குதற்குவேண்டிய பணத்தைப் பெறுதற்கு நான் முயற்சி செய்யவேண்டியிருந்தது.

சென்ற ஆண்டிலும் இந்தப் பிரச்சினை இவ்வாறே உருவெடுத்தது. தேசிய அரசுப்பேரவையில் ஒத்திவைப்புநேரத்தின்போது இதனை எடுத்துரைத்துப் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுத்தேன். இந்த ஆண்டிலும் அந்தவழியைத் தான் கைக்கொள்ளவேண்டியதாயிற்று

20 6.76 ஆம் திகதி வியாழக்கிழமை ஒத்திவைப்பு நேரத்தின்போது இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினை குறித்துப் பேசப்போவதாக இதனுடன் தொடர்புபட்ட மூன்று அமைச்சர்களுக்கு முறையாக அறிவித்தல் கொடுத்தேன், சமூகசேவை அமைச்சர், உள்ளூர் ஆட்சி அமைச்சர், நிதி அமைச்சர் என்போரே அம்மூவருமாவர்; வியாழக்கிழமை இரவு 11.30 மணிக்குத்தான் தேசிய அரசுப் பேரவையில் நான் இந்த விடயத்தைப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. வழக்கமாகக் கிடையாத வாய்ப்பு இது. குடிதண்ணீர் வழங்குதல் பற்றிப் பேசுதற்காகவே நான் கொழும்பு சென்றேன், நான் பேசி முடிந்தபின் அரசாங்கத்தின் சார்பில் எனக்கு உள்ளூர் ஆட்சி அமைச்சர் மாண்புமிகு பி. ஜி. ஆரியதாச நீண்ட நேரம் விடை கூறினார்; அவர் கூறிய விடை பொருத்தமற்றதென நான் சுட்டிக் காட்டவேண்டியிருந்தது.

இந்த ஒத்திவைப்பு நேரம் முடிந்தபின் பேரவைக் கூட்டம் பின்போடப்பட்டது. அதன் பின்னரே மாண்புமிகு ஆரியதாசாவும் வேறோர் அமைச்சரும்மோதிக்கொண்டனர்.

நிதி அமைச்சர் மாண்புமிகு பீலிக்ஸ் பண்டாரநாயக்காவே சென்ற ஆண்டிலும் உள்ளூர் ஆட்சி அமைச்சர் என்ற முறையில் குடிதண்ணீர் வழங்குதற்குப் பணம் பெறவழி வகுத்தவர். இந்த ஆண்டில் அவர் நிதி அமைச்சராயிருப்பதாலும் அவருக்குத்தான் இந்தப் பிரச்சினை நன்கு தெரியுமாகையாலும் இதற்கு வேண்டிய பணத்தைச் சமூக அமைச்சுக்கு வழங்குமாறு அவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அவருடைய மறுமொழி கிடைக்காமையால் தடுப்புக்காவலில் இருந்துகொண்டும் என் கடமையைச் செய்யவேண்டியிருந்தது. அவருக்கு ஒரு நினைவூட்டல் தந்தி அனுப்ப முயன்றேன். தந்தி அனுப்ப முடியாது கடிதம் அனுப்பலாம் என்று பொலிசார் கூறிக் காகிதம், காகித உறை முதலியவற்றைக் கொடுத்தனர்.

நான் அமைச்சருக்கு எழுதிய நினைவூட்டல் கடிதம் பொலிசுப் பரிசோதகர் நாயகம் பார்வையிட்ட பின் ஓர் ஊழியர் மூலம் அமைச்சரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. நாங்கள் கடிதம் எழுதினாலும் எங்களுக்குக் கடிதம் வந்தாலும் அவற்றைப் பார்வையிட்டபின்தான் பொலிசார் உரிய இடத்தில் சேர்ப்பார்கள்,

நான்காம் நாள் செவ்வாய்க்கிழமை வீரகேசரி வாயிலாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் திங்கள் கிழமை பூரண ஹர்த்தால் நடைபெற்ற செய்தியினை அறிந்தோம்; தினகரன் டெயிலி நியூஸ் போன்ற அரசாங்கத்தின் ஊதுகுழல்கள் இந்தச் செய்தியை வெளியிடத் துணியவில்லை;

அன்று முற்பகல் 10-15 மணிக்கு பொலிசு உதவிக் கண்காணிப்பாளர் திரு: தருமராசா எங்களைச் சந்தித்தார், நால்வரிடமும் அவர் மீண்டும் தனித்தனி வாக்குமூலங்களைப் பெற்றுத் தாமே எங்கள் விருப்பப்படி தமிழில் எழுதினார். "நான் 24.5.76ஆம் திகதி துண்டுப் பிரசுரங்களை யாழ்ப்பாண வசு நிலையத்தில் வைத்திருந்தபோது உதவி பொலிசு அதிகாரி பெரேரா கைதுசெய்தார்; நான் இந்ததுண்டுப்பிரசுரங்களை வைத்திருந்தது உண்மை. இந்தத் துண்டுப் பிரங்களை நான் யாழ்ப்பாணம் வசு நிலையத்தில்வாசித்தது உண்மை, இவ்வளவு தான் இப்பொழுது கூற இருக்கின்றது'' என்பதே நான் கொடுத்த வாக்கு மூலம்,

இந்த வாக்குமூலத்தைப் பெற்றபின் அவர் போய் விட்டார். எங்கள்மீது நீதி மன்றத்தில் வழக்குவைக்கப்படும் என்பது அன்று எங்களுக்குத் தெளிவாகத்தெரிந்தது.

(தொடரும்)

உங்கள் உடம்புத் தூய்மைக்கு

நிம் வாசனை சோப்(வேப்பெண்ணெய் கலந்தது) மெடிக்கேட்டற் சோப் பாவியுங்கள்-

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விடுதலையே வேண்டுமென்றார் மாசே..

—6-ம் பக்கத் தொடர்

புரிந்துகொள்ள முடியுமே தவிர இன்னொரு நாட்டவரால் புரிந்துகொள்ளமுடியாது;

பிரச்சினையைப் புரிந்துகொண்டவர்களால்தான் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவும் முடியும்.

இதே வகையில்—

ஓர் இனத்துக்குள்ள பிரச்சினையை அதே இனத்தைச் சேர்ந்தவர்களால்தான் புரிந்துகொள்ள முடியும். (தோழர்களைப்போல் சுய அறிவும் சிந்தனையும் இன்றித் திரிபவர்களால் புரிந்துகொள்ள முடியாதுதான்.) தமது இனத்தின் பிரச்சினையைப் புரிந்துகொண்டவர்கள் தாம் அந்த இனப் பிரச்சினையை தீர்க்கவும் கூடியவர்கள். இந்த மிகச்சிறிய உண்மையைக் கூட உணரமுடியாத இந்தத்தோழர்களா வர்க்கப் புரட்சியை வழி நடத்தப்போகிறார்கள்?

தோழர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்!

தமிழ் மக்கள் இனவிடுதலைக்காக மட்டும் போராடவில்லை; தமது தாயகத்தை மீள்விக்கவுமே போராடுகிறார்கள். தமது தாயகத்தை (Motherland) மீட்பதன் மூலமே தமிழ்த் தேசிய இனத்தின் முழுமையான விடுதலையைப் பெறமுடியும் என்று எண்ணுகிறார்கள். தமிழ்த்தேசிய விடுதலை ஒன்றினால் மட்டுமே தமிழினம் அரசியல் அடிமைத் தனத்திலிருந்து முற்றாக விடுபட முடியும். அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட பின்னர்தான் அது தன் அதிகாரத்தை உபயோகித்து தன் சோஷலிச அமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவும் முடியும். இதைத்தான் சீனத் தலைவர் மா. ஓ. சே துங் அவர்களும் கூறுகின்றார்!

"For only by fighting in defence of the motherland we can defeat the aggressors and achieve national iiberation. And only by achieving national liberation it will be possible for the proletariat and other working people to achieve their own emancipation."

—Selected works of Mao Tse-Tung Vol.II., p.196

மாசே துங்கைப் பின்பற்றுவதாகக் கூறுகின்ற இந்தத் தோழர்கள் அவரின் கருத்துக்களை மறைத்துக்கொள்வது மட்டுமன்றி அந்தக் கருத்துக்களை அடியொற்றி தமது விடுதலைக்காகப்போராடும் தமிழினத்தைக் குறை கூறவும் செய்கின்றார்கள்! இவர்களே உண்மையான சந்தர்ப்பவாதிகள். வஞ்சனையை உள்ளத்தினுள் வைத்துக்கொண்டு வாஞ்சைமிகு சொற்களால் காமுகனிடமிருந்து பணம் பிடுங்கும் விபச்சாரிபோல, சீனாவின் தயவோடு இந்நாட்டின் தலைவர்களாக தாம் வந்திடவேண்டுமென்கிற வஞ்சக எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு பாட்டாளிகளுக்காகப் போராடுவதாகக் கூறும் வாஞ்சைமிகு வாய்ப்பறையால் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்ற இந்த திரிபுவாத கம்யூனிஸ்டுத் தோழர்களே உண்மையான அரசியல் விபச்சாரிகள். இவர்களுக்குக் கொள்கையோ, குறிக்கோளோ எதுவுமே கிடையாது: தமிழினத்தின் முதுகின்மேல் இருந்துகொண்டு சவாரி செய்யமட்டுமே இவர்கள் விரும்புகிறார்கள்! அதற்காக எதையுமே கூற இவர்கள் பின்னிற்பதில்லை.

அரசியல் நேர்மையற்ற இந்தச் சந்தர்ப்பவாதிகள் உண்மையான புரட்சிப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு தாம் ஒரு புதிய புரட்சிப்பாதையைக் காட்டப்போவதாக வாய்ப்பறை அடிக்கிறார்கள். உண்மையில் இவர்கள் தமிழினத்துக்குக் காட்டக்கூடியது புரட்சிப் பாதை அல்ல, அது அரசியல் வரட்சிப்பாதை என்பதை தமிழ் மக்கள் நன்றாக அறிவார்கள்.

9-வது வெற்றி வாரம்!
செல்லமகால்
சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி, நடித்த
ஜனாதிபதி விருது பெற்ற
'அவள் ஒரு தொடர் கதை'
திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.
தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

5வது வாரம்
கெயிட்டி
ஜெயசுதா - ஜெய்சங்கர், தங்கவேலு - மனோரமா
· நடித்த ·
பந்தாட்டம்

9வது வெற்றி வாரம்
கெப்பிட்டல்
நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய், நடித்த—
கௌரவம்
(ஈஸ்ட்மென் கலர்)

லிடோ (யாழ் நகர்) 8-வது வெற்றி வாரம்
சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன் —நடித்த
அன்பைத்தேடி
(ஈஸ்ட்மன் கலர்)

கிங்ஸ்லி
சிவாஜி, ரங்கராவ், எஸ்.வி.சுப்பையா நடித்த-
கப்பல் ஓட்டிய தமிழன்

பிளாசா 9-ம் திகதி முதல்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த-
ரோசக்காரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 13 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூலை மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.